
வேட்டுவ வரி

# சிலப்பதிகாரம்

## சிலப்பதிகாரம் வேறு பெயர்கள்

தமிழின் முதல் காப்பியம்
உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
முத்தமிழ்க்காப்பியம்
முதன்மைக் காப்பியம்
பத்தினிக் காப்பியம்
நாடகப் காப்பியம்
குடிமக்கள் காப்பியம்(தெ.பொ.மீ)
புதுமைக் காப்பியம்
பொதுமைக் காப்பியம்
ஒற்றுமைக் காப்பியம்
ஒருமைப்பாட்டுக் காப்பியம்
தமிழ்த் தேசியக் காப்பியம்
மூவேந்தர் காப்பியம்
வரலாற்றுக் காப்பியம்
போராட்ட காப்பியம்
புரட்சிக்காப்பியம்
சிறப்பதிகாரம்(உ.வே.சா)
பைந்தமிழ் காப்பியம்

## நூல் அமைப்பு

- காண்டங்கள் = 3 (புகர்ர் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம்)
- காதைகள் = 30
- முதல் காதை = மங்கல வாழ்த்து பாடல்
- இறுதி காதை = வரந்தருகாதை

## புகார் காண்டம்

- புகார் காண்டத்தில் உள்ள காதைகள் = 10
- முதல் காதை = மங்கல வாழ்த்துப் பாடல் காதை
- பத்தாவது காதை = நாடுகாண் காதை

## மதுரைக் காண்டம்

- மதுரைக் காண்டத்தில் உள்ள காதை = 13
- 11வது காதை = காடுகாண் காதை
- 23வது காதை = கட்டுரைக் காதை

## வஞ்சிக் காண்டம்

- வஞ்சிக் காண்டத்தில் உள்ள காதை = 7
- 24வது காதை = குன்றக்குரவை காதை
- 30வது காதை = வரந்தருகாதை

# சிலப்பதிகாரம் ஆசிரியர் குறிப்பு

- பெயர் = இளங்கோவடிகள்
- பெற்றோர் = இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சோழன் மகள் நற்சோனை
- அண்ணன் = சேரன் செங்குட்டுவன்
- இவர் இளமையிலே துறவே பூண்டு குணவாயிற் கோட்டம் என்னும் இடத்தில் தங்கினார்.

# நூல்வெளி

- சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
- இவர் சேர மன்னர் மரபைச் சேர்ந்தவர் என்று சிலப்பதிகாரப் பதிகம் கூறுகிறது.
- இவர் காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு என்பர்.
- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம்.
- இதுவே தமிழின் முதல் காப்பியம்.
- இது முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்றெல்லாம் போற்றப்படுகிறது.
- சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியம் என்று அழைக்கப்படுகின்றன.
- திங்கள், ஞாயிறு, மழை என இயற்கையை வாழ்த்துவதாக இந்நூல் தொடங்குகிறது.




இளங்கோவடிகள்



சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்
சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி
இளைசூழ் படப்பை இழுக்கிய வேனத்து
வளைவெண் கோடு பறித்து மற்றது



கணவனோ டிருந்த மணமலி கூந்தலை
இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற் றுரைப்பப்



சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்
மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்
கட்டுண் மாக்கள் கடந்தரும் எனவாங்கு
இட்டுத் தலையெண்ணும் எயின ரல்லது



